3

கள்ளக்குறிச்சி வட்டாரத்தின் தெருக்கூத்து மரபுகள்

Therukoothu Traditions of the Kallakurichi Region

பிரதீபா.தி, ஜோதிமணி. இரா

தமிழ்த்துறை, பிஎஸ்ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர் 641004.

Pradeepa.T, Jothimani R

Department of Tamil, PSGR Krishnammal College for Women, Peelamedu, Coimbatore- 641004

Orcid id: http://www.orcid.org/0000-0002-4754-6698

Orcid id: https://orcid.org/0009-0008-2788-2222

DOI: 10.5281/zenodo.21735715

Abstract

Koothu (dance-drama) truly belongs to folk culture. So whether we call them folk koothus or simply koothu, they are one and the same. The development of koothu is drama itself. It is often performed in the open spaces of villages, without any stage, hall, or such facilities. These koothus are not performed by the common folk themselves but are performed for the people — folk artists are the ones who perform these koothus. These can also be called village dramas.

"Village drama holds national importance. It is a key element of a country's cultural heritage, one that brings out the people's inner thoughts, character, art, culture, and way of life" — writes Thiru Su. Vidyanandan, elaborating on the characteristics of folk drama.

"The artists who perform koothus were also called koothadis (koothu performers)." There is also a saying that a koothadi looks to the east, while a hired laborer looks to the west. The reason is that koothus generally continue until dawn — this all-night performance is called kazhaikoothu. Performances like Kaniyan koothu, however, also take place during the day.

Among the artists, men generally took on the larger share. Men also took on the roles of women. Later, as koothus too were affected by the passage of time, women began to find a place in them as well. The performers drew their material for koothus both from Puranas and epics, and from the everyday lives of ordinary people.

Koothus with strict, planned, written formats are not common. They continue to exist mainly through oral tradition and memory. The form and content of koothus change depending on the gathered audience. Koothus also change according to the mental

state/mood of the performers.

Koothus are of many kinds. During the Sangam period, Kuravai koothu was widely prevalent. As offshoots of this, forms like Aychiyar Kuravai and Kunrak Kuravai flourished. The Silapathikaram mentions eleven types of koothu. Thus, many of the koothus mentioned in literature of that era have since gone out of practice.

In ancient times, there were war-related koothus such as Veri Kuravai, Thunangai, Veriyaattu, Velikoothu, Vazhpavai, and Thudikkoothu, performed in battlefield-like settings; religious/devotional koothus such as Kuravai, Thunangai, Veriyaattu, Kodukotti, Pandarangam, Valli Koothu, Ariya Koothu, and Pavai Koothu; and recreational/ entertainment koothus such as Thunangai, Valli Koothu, Ariya Koothu, Pavai Koothu, and Kurrak Koothu. Many of these have faded away and vanished over time, though a few can still be seen today.

These can broadly be divided into two categories: those based on storytelling, and those that showcase physical skill/performance. Among the story-based koothus, they can further be divided into koothus performed by humans and koothus performed by puppets.

Human koothus (Manidha koothu): examples include Therukoothu, Kaniyan koothu, and Dappankoothu. Puppet koothus (Bommai koothu): examples include Thol Paavai koothu (leather shadow puppetry) and Bommalaattam (string puppetry).

ஆய்வுச் சுருக்கம்

கூத்து என்பதுவே நாட்டுப்புறத்திற்குரியது தான். எனவே நாட்டுப்புறக் கூத்துகள் என்றாலும் கூத்து என்றாலும் ஒன்றுதான். கூத்தின் வளர்ச்சி தான் நாடகம். அரங்கம், அவை, எதுவுமில்லாமல் கிராமங்களின் திறந்த வெளிகளில் இது நடத்தப்படுவது உண்டு. இக்கூத்துகள் நாட்டுப்புற மக்களை நிகழ்த்தாமல் மக்களுக்காக நிகழ்த்தப்படுவது, நாட்டுப்புறக் கலைஞர்களே இக்கூத்துக்களை நிகழ்த்துகிறார்கள். இவற்றை கிராமிய நாடகங்கள் என்றும் அழைக்கலாம்.

"கிராமிய நாடகத்திற்குத் தேசிய முக்கியத்துவம் உண்டு. அது நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தின் முக்கிய அம்சம், நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச் சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்து விளங்குவது அக்கலை" என்று நாட்டுப்புற நாடகத் தன்மைகளைப் பற்றி விரித்துரைக்கிறார் திரு. சு. வித்தியானந்தன்.

"கூத்துகளை நிகழ்த்தும் கலைஞர்களைக் கூத்தாடிகள் என்றும் அழைத்தனர்". கூத்தாடி கிழக்கே பார்ப்பான், கூலிக்காரன் மேற்கே பார்ப்பான் என்று ஒரு பழமொழியும் உண்டு. காரணம், கூத்துகள் பொதுவாக விடியும் வரை நடைபெறுவது தான் கிராமக் கூத்து. கணியான் கூத்துப் போன்றவை பகலிலும் நடைபெறுவதுண்டு.

கலைஞர்களில் பொதுவாக ஆண்களே அதிகப் பங்கு பெற்றனர். பெண்களின் வேடத்தையும் ஆண்களே போட்டுக் கொண்டனர். பின்னர்க் கூத்துகளும் காலத்தின் வளர்ச்சியால் பாதிக்கப்பட்டது போலும், பெண்களும் இடம்பெற ஆரம்பித்தனர். கூத்துகளுக்கான கருத்துக்களை இவர்கள் புராண இதிகாசங்களில் இருந்தும், பொதுமக்களின் வாழ்வில் இருந்தும் எடுத்துக் கொண்டனர்.

கட்டுப்பாடான திட்டமிட்ட எழுத்து வடிவுடைய கூத்துகள் அதிகமில்லை. நெஞ்சிலும் நாவிலுமே தங்கள் வாழ்வை நடத்தி வருகின்றன. கூடுகின்ற கூட்டத்தைப் பொறுத்துக் கூத்துகளின் வடிவமும், கூற்றுகளும் மாறுகின்றன. கூத்தாடிகளின் மன நிலைகளுக்கு ஏற்பவும் கூத்துகள் மாறுவதுண்டு.

கூத்துகள் பல வகைப்படும் சங்க காலத்தில் குரவைக் கூத்து பெருவழக்காக விளங்கி வந்தது. இதன் கிளையாக ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்றவை திகழ்ந்தன. சிலப்பதிகாரம் பதினொருவகைக் கூத்துக்களைக் கூறுகின்றது. இவ்வாறு இலக்கியங்கள் கூறும் அன்றைய கூத்துகளில் பல வழக்கொழிந்து விட்டன.

பழங்காலத்தில் வேறிக்குரவை, துணங்கை, வேறியாட்டு, வேளிக்கூத்து, வாழ்பறை, துடிக்கூத்து, சூரல் நிலை போன்ற போர்க்கூத்துகளும்; குரவை, துணங்கை, வேறியாட்டு, கொடுகொட்டி, பாண்டரங்கம், வள்ளிக் கூத்து, ஆரியக்கூத்து, பாவைக்கூத்து போன்ற சமயம் தழுவிய கூத்துகளும்; துணங்கை, வள்ளிக்கூத்து, ஆரியக் கூத்து, பாவைக்கூத்து, குரற்கூத்து போன்ற பொழுதுபோக்குக் கூத்துகளும் இருந்திருக்கின்றன.

இவற்றில் பல தேய்ந்தும் மாய்ந்தும் போயின. கதைத் தழுவியவை என்றும், உடல் திறமையை வெளிப்படுத்துபவை என்றும் இரண்டாகப் பகுக்கலாம். கதை தழுவியவற்றில் மனிதர்களின் கூத்து என்றும், பொம்மைகளின் கூத்து என்றும் பகுக்கலாம். தெருக்கூத்து, கணியான் கூத்து, டப்பாங்கூத்துப் போன்றவை மனிதக் கூத்து; தோல் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் போன்றவை பொம்மைக் கூத்துகள்.

Keywords: *Therukoothu (Street Theatre), Musical Composition/Arrangement, Koothu Structure/ Format, Festival, Rhythms/Talas.* தெருக்கூத்து,இசை அமைப்பு, கூத்து அமைப்பு முறை, திருவிழா, தாளங்கள்.

முன்னுரை

தெருக்கூத்து என்பது தமிழ்நாட்டில் பிரபலமான ஒரு நாட்டுப்புற கலை வடிவம். இது ஒரு வகையான நடனம்; இதில் கலைஞர்கள் தெருக்களில் நடனமாடி, பாடி, வாசித்து, கதைகளைச் சொல்கிறார்கள்.

தெருக்கூத்துக் கலைஞர்களின் வாழ்க்கை முறை, தெருக்கூத்துக் கலைஞர்களின் கலை மற்றும் கலாச்சாரம், தெருக்கூத்துக் கலைஞர்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார நிலைகளை வெளிப்படையாக விளக்குகின்றன. தெருக்கூத்துக் கலைஞர்கள் தெருக்களில் நடனமாடி, பாடி, வாசித்து, கதைகளைச் சொல்கிறார்கள். அவர்கள் தங்கள் கலையை வெளிப்படுத்துவதற்காக பல்வேறு வகையான கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தெருக்கூத்து

தெருவில் நிகழ்த்தப்படும் கூத்து தெருக்கூத்தாகும். அதற்கு மேடையும் திரையும் கிடையாது. மக்களுக்கு நடுவே தெருக்களில் ஒப்பனையுடன் ஆடிப் பாடிச் செல்வதுண்டு. "தெருக்கூத்து என்பது நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்தது. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளிகளிலும் இக்கூத்து பெரும்பாலும் இரவு நேரங்களில் நடைபெறும்" என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

தெருக்கூத்தின் கருக்களைக் கலைஞர்கள் புராண இதிகாசங்களில் இருந்தே பெற்றுக்

கொள்கிறார்கள். பாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், அரிச்சந்திரன் கதை, வள்ளியம்மாள் கதை ஆகியவை இக்கலைஞர்களால் நடிக்கப்படும். ஆடலும் பாடலும் கூத்தின் முக்கிய அம்சங்கள் ஆக, இவர்களின் கவிதைகள் இதிகாசம், பக்தி, கலப்பு, வரலாறு, இனச்சார்பு, நவீனம் என ஆறு வகையாக அமையும்.

"கட்டை கட்டியாடும் கூத்து என்ற பெயரில் இன்றும் கட்டைகளாலாகிய அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து" என்பார் டாக்டர் அ. அறிவுநம்பி.

பொதுவாகத் தமிழகத்தின் வடமாவட்டங்களில் தெருக்கூத்து நடைபெறுகின்றது. கிராமக் கோவில்களில் பங்குனி மாதம் தொடங்கி ஆடி வரையில் நடைபெறும். குறிப்பாக பாரதக் கூத்தானது திரௌபதி அம்மன் கோவிலருகில், திறந்தவெளிகளில் நிகழும். கொஞ்சம் மேட்டுப் பகுதியில் கம்பங்களை நட்டு, விளக்குகளைக் கட்டிக் களரியை உருவாக்குவர். ஒரு பெஞ்சின் மீது இசைக் கலைஞர்கள் அமர்ந்திருப்பர். மூன்று பக்கங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பர். களரி கட்டி, கட்டியங்காரன் அறிமுகம் செய்ய இரவு பத்து மணி வாக்கில் தொடங்கும் தெருக்கூத்து விடிய விடிய நடைபெறும்.

தெருக்கூத்து தமிழ்நாட்டின் கிராமிய அரங்கக் கலை. உண்மையில் இதுதான் தமிழ் அரங்கக் கலையாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. கண் முன்னே பிரமாதமான வடிவில் கூத்து இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் பல திசைகளில் உத்வேகம் அளிக்கக்கூடிய சக்தியைக் கொண்டுள்ளது கூத்து என்பார் ந. முத்துசாமி.

எனினும் இன்று இது திரைப்படத்தால் தேய்ந்து வருகிறது. மேடை நாடகத்தால் மவுசு குன்றி வருகிறது. ஆனால் ஒரு காலத்தில் சிற்றூர் மக்களுக்குச் சிறந்த அறிவுக் களஞ்சியமாகவும், பொழுதுபோக்குப் பொக்கிஷமாகவும், ஓய்வெடுத்துக் கொள்ளும் உல்லாச நந்தவனமாகவும் விளங்கியது என்றால் மிகையன்று.

வாய்மொழித் தகவல்கள்

பொதுவாக கலைஞர்கள் சிவனும் பார்வதியும் சேர்ந்து நடத்தியதுதான் தெருக்கூத்து என்றும் சொல்வார்கள். அவர்களைப் பார்த்து ஆடக் கூடியவர்கள் தான் பார்த்தாடிகள் என்று சொல்வார்கள். அவர்களை கூத்தாடிகள் என்றும் சொல்வார்கள். அவர்கள் இருவரும் தான் தில்லை (சிதம்பரம்) தார்காவனத்தில் ஆண் பெரிதா? பெண் பெரிதா? என்ற போட்டியில் கூத்து நிகழ்த்தினார்கள். சிவன் பெரிதா, சக்தி பெரிதா என்ற வாக்குவாதத்தில் சிவன் ஒரு சூழ்ச்சி செய்தார். சிவன் தன் காலை மேலே தூக்கி ஆடினார். அப்போது காதில் போடக்கூடிய காலாணியைக் கீழே விழுந்ததைக் காலால் எடுத்துக் காதில் மாட்டிக் கொண்டார்.பார்வதியும் போட்டிக்குப் போட்டி காலைத் தூக்கி ஆடப் போனாள். அப்போது திருமால் சொன்னார் பெண்கள் காலைத் தூக்கி ஆடக்கூடாது என்ற ஒரு புராணமும் உண்டு.

மாதவிடாய் பெண்களுக்கு மட்டும் தான் வருவதற்கான காரணம் — அந்தக் காலக் கணக்கில் நான்கு யுகங்கள் உண்டு (சத்ய யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம்) திரேதா யுகம் முதல் யுகத்தில் சக்தியே எல்லாமும் ஆட்சி செய்தது என்ற வாய்மொழி வழக்காறு உள்ளது. அவர்கள் தான் சிவனைப் படைத்ததாக ஒரு சொல்லாடல் உள்ளது. அதனால் திருமால் வந்து பெண்களுக்கு இவ்வளவு அகங்காரம் இருக்கக் கூடாது என்று மாதத்திற்கு ஏழு முறை அல்லது ஐந்து முறை மாதவிடாய் வரும்படிச் செய்து அவர்களுடைய அகங்காரத்தையும் திமிரையும் குறைப்பதற்காக இதைச் செய்தார் என்பர். ஆண்களை விட பெண்களுக்குத் தான் மனவலிமை அதிகம். இந்த

மாதவிடாய் வருவதன் மூலம் உடல் வலிமை குறைந்து காணப்படுவார்கள். மாதவிடாய் இல்லாத காலத்தில் தான் உடல் வலிமையுடன் காணப்படுவார்கள். ஆண்களுக்கு நிகராகத் தான் மற்ற நாட்களில் பெண்கள் வலிமையுடன் இருப்பார்கள். (இப்போது வரும் சமூகத்தில் பெண்கள் மட்டம் தட்டப்படுவதற்கு இது போன்ற சொற்கள் காரணமாக இருக்கின்றன.) அவர்கள் இருவரும் தில்லை தார்காவனத்தில் ஆடிய கூத்து தான் திருக்கூத்து. அவர்கள் தான் கூத்தாடிகள்; அவர்களைப் பார்த்து ஆடிய கலைஞர்கள் எல்லாரும் பார்த்தாடிகள். திரு என்பது ஒரு அடைமொழியாகும். அந்தக் கூத்து தெருவில் ஆடுவதால் அது தெருக்கூத்தாக மாறியது. தெருக்கூத்தில் ஜமாக்கல், குழுக்கள், நாடகச் சபா, நாடக மன்றம், நாடக சபை என நிறைய குழுக்கள் இருக்கும்.

தெருக்கூத்து பெரும்பாலும் இரண்டு கதைப் பொருண்மையைக் கொண்டு நடத்தப்படுகிறது. ஒன்று மகாபாரதம், இரண்டாவது இராமாயணம். இந்த இரண்டு இதிகாசங்களுமே மிகவும் முக்கியமானவை. அதன் பின் நாவல்கள், கந்தபுராணம், சிவபுராணம், சக்திபுராணம் ஆகியவை பெரும்பாலும் நடத்தப்படுவதில்லை. அதாவது, சிறு தெய்வங்களான செல்லியம்மன், மாரியம்மன் ஆகியோருக்குத் திருவிழா நடக்கும் போது இது போன்ற கதைகள் நடத்துவார்கள்.

நாவல்கள் சில இறப்பு சடங்குகளில் நடத்துவார்கள். சிலர் காமாட்டி (மாசி மாதத்தில்) கும்மிடுவார்கள். மேலும் சேலம் பகுதியில் அண்ணமார் கதைகள் நடத்துவார்கள்; இராமாயணம், மகாபாரதம் நடத்துவார்கள். அண்ணமார் சுவாமி கதைகள் நாவல்களில் வரும்.

கூத்து அமைப்பு முறை

முதலில் கோட்டகை அமைப்பது; பிறகு பொருட்களைத் தாயார் நிலையில் எடுத்து வைப்பது. பொருட்கள் என்றால் இசைக் கருவிகளான சட்டை, மிருதங்கம், மாத்தாளம் — இவையெல்லாம் தாயார் நிலையில் வைத்த பின், முதலில் கட்டியக்காரன் வருவார். கட்டியக்காரன் வந்து எல்லாருக்கும் அறிமுகம், வந்தனம் செய்வார். பிறகு கட்டியக்காரனுக்கு அப்புறம் குழுத் தலைவர் வருவார்; அவரே நாடக மன்றத் தலைவர். அவர் வந்து கதைக் கதைப்பு, கதை அறிமுகம் சொல்வார்கள். அதன் பிறகு ராஜா வருவார்கள் — தொடக்கத்தில் வரக்கூடியவர்கள். எல்லாக் கதையிலும் ராஜா வருவார்கள்; அதன் பிறகு அவருடைய மனைவி வருவார்கள்; அதன் பிறகு முக்கிய கதாபாத்திரங்கள், துணைக் கதாபாத்திரங்கள் வருவார்கள். கதைக்கு ஏற்பக் கதாபாத்திரம் வேறுபடும். சாமி நாடகம் என்றால் சாமிக்குச் சம்பந்தமான சிவன், பார்வதி, சரஸ்வதி, பிரம்மன், விஷ்ணு போன்ற கதாபாத்திரங்கள் வரும். மகாபாரதம் என்றால் அர்ச்சுனன், கிருஷ்ணன், கௌரவர், பாண்டவர், துரியோதனன், கர்ணன் ஆகியோர் எல்லாரும் வருவார்கள். இராமாயணத்தில் இராமன், இலக்குவன், சீதை வருவார்கள். மேலும் படலத்திற்கு ஏற்றவாறு கதாபாத்திரம் அமையும்.

கதாபாத்திரம் அமைப்பு

ஒரு நாளில் அறுபது நாழிகை உண்டு; அதில் பகல் முப்பது, இரவு முப்பது நாழிகை. கூத்து பொதுவாக இருபது முதல் முப்பது நாழிகை வரை நடப்பது வழக்கம். ஆனால் இங்கு முப்பது நாழிகை நடக்காது — இரவு பத்து மணிக்குத் தொடங்கி காலையில் ஐந்து மணிக்கு முடித்துவிடுவார்கள்.

இனவேறுபாடு

ஒரு இனத்தில் இந்தச் சாமியைச் சார்ந்தே இருக்க வேண்டும் என்ற வேறுபாடு உள்ளது. மற்ற சாதியினரைச் சேர்க்க மாட்டார்கள். மேலும் சில கதைகளை இந்தக் குழுக்களே அமைக்க வேண்டும் என்ற வேறுபாடும் உள்ளது. இது அந்தக் காலத்தில் இருந்து வந்தது. இப்போது வரும் காலத்தில்

ஆட்கள், கதாபாத்திரங்கள் இல்லாத காரணத்தால், இப்போது யார் வேண்டுமானாலும் கதாபாத்திரம் செய்யலாம் என்ற முறை உள்ளது. இப்போது எடுத்துக்காட்டாக, அருந்ததியர் சமூகம் என்ற சமூகம் இப்போது இருக்கிறது; தமிழ் சமூகத்தில் அந்தச் சமூகத்தைச் சார்ந்து நிறைய கதைகள் இருக்கின்றன.

அண்ணமார் சுவாமி கதைகளை பெரும்பாலும் மேல் சாதியினரே சொந்தம் கொண்டாடி நடத்துவார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர் பெரும்பாலும் அண்ணமார் சுவாமி கதைகள் நடத்த மாட்டார்கள்; ஓரளவுக்கு அப்போதைக்கப் போது நடத்துவார்கள். மேலும், ஒரு குழுவில் பல சாதியினர் கலந்திருந்தால், அதில் முக்கியக் கதாபாத்திரம் இருக்கும், அப்புறம் துணைக் கதாபாத்திரம் இருக்கும். அதில் முக்கியக் கதாபாத்திரத்தில் தலைவர் கதாபாத்திரத்தை மேல் சாதியினரே போடுவார்கள்; மற்றவர்களுக்குத் தர மாட்டார்கள். ஆனால் இப்போது இருக்கும் காலகட்டத்தில், கதை நன்றாகத் தெரிந்திருப்பவர்களுக்கு மட்டுமே முக்கியக் கதாபாத்திரத்தைத் தருவார்கள்.

இப்போது தெருக்கூத்து சூழல் எப்படி இருக்கிறது என்றால், தெருக்கூத்தில் திருநங்கைகள் அதிகமாக வருகிறார்கள். சிலர் தகாத செயல்கள் செய்வதால் தெருக்கூத்துக்கான மதிப்பு குறைகிற மாதிரி இருக்கிறது. எடுத்துக்காட்டாக, கரூரில் வேளாளர் சமூகம் இருந்தால், அவர்களே ஒரு குழுவாக உருவாக்கிக் கொள்வார்கள்; மற்ற சமூகத்தை அதில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். முன்பு இரண்டு அல்லது மூன்று குழுக்கள் இருக்கும் — மேல் சாதியில் இரண்டு குழு, கீழ் சாதியில் ஒரு குழு இருக்கும். பிற்காலத்தில் மக்களுக்கு தெருக்கூத்தில் ஈடுபாடு இல்லாமல் இருப்பதால், மற்ற சாதியினரோ, கதை தெரிந்தவர்களோ ஒன்றாகச் சேர்ந்து குழு அமைத்துக் கொள்கிறார்கள்.

திருவிழா

ஆண்டில் 365 நாட்களில் பெரும்பாலும் 200 நாட்கள் தெருக்கூத்து இருக்கும். அதில் எல்லாத் திருவிழாக்களிலும் தெருக்கூத்து இருக்கும். மாரியம்மன், தேர்த்திருவிழா, நல்லதங்காள் திருவிழா, கன்னியம்மார், செல்லியம்மன் போன்ற திருவிழாக்களில் தெருக்கூத்து நடத்தப்படுகின்றன. கருப்பசாமி போன்ற ஆண் தெய்வத்திற்கும், சிறு தெய்வங்களுக்கும் பெரும்பாலும் தெருக்கூத்து நடைபெறும். ஆண் மற்றும் பெண் இரண்டு தெய்வங்களுக்கும் தெருக்கூத்து நடைபெறும். இறப்பு சடங்குகளிலும் தெருக்கூத்து வைப்பார்கள். காதணி விழாவிலும் தெருக்கூத்து வைப்பார்கள். கன்னியம்மாரில் காதணி விழா நடைபெறும்போது, வசதியான குடும்பமாக இருந்தால் இது போன்ற தெருக்கூத்துக் கலைஞரைக் கூப்பிட்டு, ஏழு கன்னியின் கதைகளை நடத்தித் தருவார்கள்.

சிறு தெய்வங்களான செல்லியம்மன், மாரியம்மன், கருப்பசாமி, பெரியநாயகி, அங்காள பரமேஸ்வரி, கன்னியம்மார் கதைகள், நல்லத்தங்காள், ரேணுகா சாமரம், உடல் மாரியம்மன் பிறப்பு போன்றவை சிறு தெய்வ வழிபாட்டில் வரும் சாமி கதைகள். ஆண் தெய்வங்களான கருப்பன்னசாமி கதை, மதுரை வீரன் சாமி கதைகளுக்கு ஏற்ப நடத்துவதும் உண்டு. முருகன், வள்ளி, கந்தபுராணத்தில் வரும் கதைகளை வைத்தும் தெருக்கூத்து நடத்துவார்கள். இறப்பில் துக்கமான கதைகள் — கர்ண மோட்சம், பம்பரவாகன சண்டை போன்ற துக்கமான கதைகளை இறப்பு சடங்குகளில் வைப்பார்கள்.

காமாட்டி (மாசி மாதத்தில்) மண்ணால் இரண்டு சிலைகளை — ஆண் மற்றும் பெண் சிலை — செய்து, அதில் மாவு, பயிர் வகைகள் எல்லாம் படைத்து, அங்கே தெருக்கூத்து வைப்பார்கள். காமாட்டியின் போது திரைப்படக் காட்சிகளும் வைப்பார்கள்; வசதிகள் அதிகமாக இருந்தால் சிலர் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் வைப்பார்கள். சிறு தெய்வங்களுக்கு மட்டுமல்லாமல், திருகுமதி அம்மன், முருகன், சிவன், பார்வதி, பெருமாள் போன்ற பெரு தெய்வங்களுக்கும் தெருக்கூத்து வைப்பார்கள். பெருமாள் கோவிலில் கிருஷ்ணரின் பிறப்பு, வளர்ப்பு, கிருஷ்ணரைப் பற்றிய கதைகள் எல்லாம் அங்கு வைப்பார்கள்.

நாட்கள்

தெருக்கூத்து ஆறு மாதங்கள் நடைபெறும் — மாசி மாதம் முதல் ஆடி மாதம் வரை தெருக்கூத்துகள் அதிகமாக இருக்கும். ஆவணி மாதத்தில் குறைவாக இருக்கும். புரட்டாசியில் முடிந்துவிடும். திருவிழாக்கள் நடக்கும் நேரத்தில் தெருக்கூத்து அதிகமாக இருக்கும்; அப்புறம் இறப்பு நிகழ்ச்சிகளிலும் காணப்படும்; அதற்குப் பிறகு அவ்வப்போது நிகழ்ச்சி இருக்கும்.

இசை அமைப்பு

இரண்டு மெட்டு வகைகள் உண்டு — வடக்கத்தி மெட்டு, தெற்கத்து மெட்டு. வடக்கத்தி மெட்டில் கட்டை ஐந்து; கட்டையில் பாடும்போது ஏழு கட்டை வரை பாடுவார்கள் குத்துப் பாட்டு. தெற்கத்து மெட்டு 2, 2½, 1½ என மெல்லிசை மாதிரி சன்னமாக வரும்.

தாளம்

பெரும்பாலும் 32 தாளங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. 5 அல்லது 6 தாளங்கள் தான் பயன்படுத்துகிறார்கள். 32 தாளங்களுக்கும் ஒவ்வொரு தாளத்திற்கும் ஒரு பெயர் உண்டு. ரூபகம், ஆதி, ஏகதாளம் ஆகியவை அடிக்கடி பயன்படுத்தப்படும். இசைக்கருவி — குழல்.

32 தாளங்கள்

1. துருவ தாள வகைகள் – 5
1. துருவ திஸ்ரம்
2. துருவ சதுஸ்ரம்
3. துருவ கண்டம்
4. துருவ மிஸ்ரம்
5. துருவ சங்கீர்ணம்
2. மட்டிய தாள வகைகள் – 5
6. மட்டிய திஸ்ரம்
7. மட்டிய சதுஸ்ரம்
8. மட்டிய கண்டம்
9. மட்டிய மிஸ்ரம்
10. மட்டிய சங்கீர்ணம்
3. ரூபக தாள வகைகள் – 5
11. ரூபக திஸ்ரம்
12. ரூபக சதுஸ்ரம்
13. ரூபக கண்டம்
14. ரூபக மிஸ்ரம்
15. ரூபக சங்கீர்ணம்
4. ஜம்பை தாள வகைகள் – 5
16. ஜம்பை திஸ்ரம்
17. ஜம்பை சதுஸ்ரம்
18. ஜம்பை கண்டம்
19. ஜம்பை மிஸ்ரம்
20. ஜம்பை சங்கீர்ணம்
5. திரிபுடை தாள வகைகள் – 4
21. திரிபுடை திஸ்ரம்
22. திரிபுடை சதுஸ்ரம் – ஆதி தாளம்
23. திரிபுடை கண்டம்
24. திரிபுடை மிஸ்ரம்
6. அட தாள வகைகள் – 4
25. அட திஸ்ரம்
26. அட சதுஸ்ரம்
27. அட கண்டம்
28. அட மிஸ்ரம்
7. ஏக தாள வகைகள் – 4
29. ஏக திஸ்ரம்
30. ஏக சதுஸ்ரம்
31. ஏக கண்டம்
32. ஏக மிஸ்ரம்

திசைகள்

வடக்கு: (திருவண்ணாமலை, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், காஞ்சிபுரம்)

மேற்கு: (கோவை, சேலம், கரூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு)

கீழக்கு-தெற்கு: கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம், அரியலூர், பெரம்பலூர் ஆகிய திசைகளில் தெருக்கூத்துகள் நடைபெறுகின்றன.

முடிவுரை

தெருக்கூத்து என்பது வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சி அல்ல. அது தமிழரின் பாரம்பரியம், பண்பாடு மற்றும் வாழ்வியல் மதிப்புகளின் உயிருள்ள வெளிப்பாடு. பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்களிடமிருந்து தொடர்ந்து வரும் இக்கலை, எளிய மக்களுக்கு இதிகாசங்களையும் நீதி நெறிகளையும் கொண்டு சேர்த்த சமூகக் கல்விக்கூடமாக விளங்கியது. நவீன பொழுதுபோக்கு ஊடகங்கள் வளர்ந்துவிட்ட இன்றைய காலத்திலும், தெருக்கூத்து போன்ற பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமை. ஏனெனில், இவைதான் நம் வேர்களை நமக்கு நினைவூட்டி, தமிழ் பண்பாட்டு அடையாளத்தைக் காக்கும் கவசங்களாகத் திகழ்கின்றன. தெருக்கூத்தைக் காப்பது என்பது தமிழ் பண்பாட்டையே காப்பதற்குச் சமம்.

பெயர் : சாரதி

கல்வி : முதுகலை

பாலினம் : ஆண்

ஊர் : கள்ளக்குறிச்சி

தொழில் : தெருக்கூத்து கலைஞன்

துணை நூற்பட்டியல்

1. தமிழக நாட்டுப்புறவியல் கட்டுரைகள், பேராசிரியர் முனைவர் பெ.சுப்பிரமணியன், வெளியீடு: காவ்யா, முதற்பதிப்பு, 2009
2. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், டாக்டர் ஆறு.இராமநாதன், முதற்பதிப்பு _டிசம்பர் 1986, வெளியீடு :மணிவாசகர் பதிப்பகத்தின் வெள்ளிவிழா
3. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, சு.சண்முகசுந்தரம், முதற்பதிப்பு _டிசம்பர் 1980, வெளியீடு மணிவாசகர் நூலகம்

References

1. Subramanian, Dr. P. Tamil Nadu Folk Studies Articles, Publisher: Kavya, First Edition: 2009
2. Ramanathan, Dr. A., Folk Studies Research , Publisher: Manivasagar Pathippagam - Silver Jubilee Publication, First Edition: December 1986
3. Shanmugasundaram, S. History of Folk Literature, Publisher: Manivasagar Library First Edition: December 1980

Cite this Article in English

Pradeepa.T, Jothimani R "**Therukoothu Traditions of the Kallakurichi Region**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 15-22*